இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 02-10-2024

# விசாரணை வளையத்தில் பா.ஜ.க.!

அவர்களால் வளர்க்கப்பட்ட பூதம், அவர்களையே பழிவாங்கத் தொடங்கி விட்டதன் அடையாளம்தான் பெங்களூரு வழக்கு!

**தேர்தல் பத்திரம் என்ற பெயரால் மிரட்டி பணம் வசூலித்ததாக ஒன்றிய அமைச்சர்கள் நிர்மலா சீதாராமன், ஜே.பி.நட்டா உள்ளிட்டோர் மீது சிறப்பு நீதிமன்றம் உத்தரவின் பேரில் கர்நாடக மாநில காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. ஒருவர் இந்திய நாட்டின் நிதி அமைச்சராக இருக்கிறார். இன்னொருவர் இந்திய நாட்டை ஆளும் கட்சியின் தேசியத் தலைவர்.**

பெங்களூருவைச் சேர்ந்த ஜனாதிகார சங்கர்ஷ பரிஷத் என்ற அமைப்பைச் சேர்ந்த ஆதர்ஷ் அய்யர் என்பவர் பெங்களூரு சிட்டி சிவில் கோர்ட் வளாகத்தில் உள்ள மக்கள் பிரதிநிதிகள் சிறப்பு நீதிமன்றத்தில் கடந்த ஏப்ரல் மாதம் ஒரு வழக்கை தாக்கல் செய்தார். **“ஒன்றிய பா.ஜ.க. அரசு தேர்தல் நிதியை பத்திரங்கள் மூலமாகக் கொடுப்பது என்ற திட்டத்தைக் கொண்டு வந்துள்ளது. இதன் மூலமாக பா.ஜ.க. அதிகமான அளவு நிதியைப் பெற்றுள்ளது. இந்த நிதிகளில் மிரட்டிப் பறிக்கப்பட்டவை அதிகம். எனவே இது பற்றி வழக்குப் பதிவு செய்ய வேண்டும்”** என்று தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார் ஆதர்ஷ் அய்யர்.

ரூ.8 ஆயிரம் கோடி அளவுக்கு நிதி திரட்டப்பட்டுள்ளதாகச் சொல்கிறார் ஆதர்ஷ் அய்யர்.

ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன், பா.ஜ.க. தேசியத் தலைவரும் ஒன்றிய அமைச்சருமான நட்டா, கர்நாடக பா.ஜ.க. தலைவர் விஜயேந்திரா, கட்சியின் முன்னாள் தலைவர் நளின் குமார் கட்டீல் ஆகியோர் மீதும் அமலாக்கத்துறை சட்டப்படி நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் என்று தனது மனுவில் குறிப்பிட்டு இருந்தார்.

இம்மனுவை விசாரித்த நீதிபதி, இவர்கள் அனைவர் மீதும் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். இதைத் தொடர்ந்து பெங்களூரு திலக் நகர் காவல் துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. அமலாக்கத்துறையும் இவ்வழக்கில் இணைக்கப்பட்டுள்ளது.

இதற்கு கர்நாடக உயர்நீதிமன்றத்தில் போய் பா.ஜ.க. முன்னாள் தலைவர் நளின் குமார் கட்டீல் தடையாணை பெற்றுள்ளார். அது இடைக் காலத் தடைதான்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் சட்டப் பிரிவுகள் 384, 120பி, 34 ஆகிய பிரிவுகளின் படி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. குற்றநோக்குடன் சதி செய்தல், மிரட்டி பணம் பறித்தல், கூட்டுச் சேர்ந்து குற்றம் செய்தல் ஆகிய குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. **“இந்த விவகாரத்துக்குப் பொறுப்பேற்று நிர்மலா சீதாராமன் ஒன்றிய அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும்”** என்று காங்கிரஸ் கட்சி கோரிக்கை வைத்துள்ளது.

காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ், செய்தித் தொடர்பாளர் அபிஷேக் சிங்வி ஆகியோர் டெல்லியில் அளித்த பேட்டியில், **“கடந்த 11 ஆண்டுகளாக எதிர்க்கட்சிகள் மீது பல்வேறு வழக்குகளை மத்திய அமைப்புகள் பதிவு செய்துள்ளன. எனவே நிர்மலா சீதாராமன் மீதான வழக்கை எப்படி கையாள வேண்டும் என்று அவர்களுக்கு நாம் கற்றுத் தர வேண்டியது இல்லை. இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தின் கண்காணிப்பில் நடத்தப்பட வேண்டும். அல்லது உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்படும் சிறப்பு விசாரணைக் குழுவால் விசாரணை நடத்தப்பட வேண்டும். இந்த வழக்கில் ஒன்றிய அரசின் தலையீடு இல்லாததை உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் உறுதி செய்ய வேண்டும்”** என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் புதிதல்ல. அரசியல் களத்தில் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள்தான். பொது வெளியில் பேசப்பட்ட குற்றச்சாட்டுகள்தான். இதற்கு பா.ஜ.க. தலைமையால் மறுப்பு தெரிவிக்கப்படாத குற்றச்சாட்டுகள் தான் இவை. இப்போது முதன்முதலாக நீதிமன்றத்தின் விசாரணைக்குள் வந்துள்ளன.

தேர்தல் பத்திரங்கள் தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, **“எங்களுக்கு யார் நன்கொடைகள் வழங்கியது என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை”** – என்று சொன்னவர் ஒன்றிய பா.ஜ.க. அரசின் வழக்கறிஞரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா.

**“நன்கொடையை யார் வழங்கியுள்ளனர் என்பது அதனைப் பெறும் கட்சிக்கு மட்டுமே தெரியும். மற்ற கட்சிகளுக்கு தெரியாமல் ரகசியம் காப்பதுதான் இந்த திட்டம்”** என்று குறிப்பிட்டார். அப்போது, குறுக்கிட்ட தலைமை நீதிபதி எஸ்.ஏ.சந்திரசூட் தலைமையிலான அமர்வு, **“அப்படியானால் வாக்காளர்களின் உரிமை என்ன? ஏன் நன்கொடை விபரங்களை வாக்காளர்கள் தெரிந்து கொள்ளக் கூடாது?”** என்று கேள்வி எழுப்பினர்.

**“பொதுமக்கள் எதை வேண்டுமானாலும் எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் நிலை இருக்கக் கூடாது. நியாயமான கட்டுப்பாடுகள் தேவை”** என்று சொன்னவரும் சொலிட்டர் ஜெனரல்தான். மக்களைப் பற்றிக் கவலைப்படாத எதேச்சதிகாரம் கொண்டவர்கள் அல்லவா பா.ஜ.க.வினர் ?

**‘என்னிடம் பணமில்லை, அதனால் தேர்தலில் நிற்கவில்லை’ என்று பஞ்சப் பாட்டு பாடிய நிர்மலா அம்மையார், இப்போது நீதிமன்றத்தின் விசாரணை வளையத்துக்குள்ளே வந்துள்ளார்.**

**“கருப்புப் பணத்தை ஒழிப்பதற்கு நாங்கள் ஒரு வழியைத் தேடிக் கொண்டிருந்தோம். அந்த வழிதான் தேர்தல் பத்திரங்கள். இது முழுமையான தீர்வு என்று சொல்லவில்லை. எந்த அமைப்பும் 100 சதவிகிதம் சரியானது அல்ல. அதில் இருக்கும் குறைகளை மேம்படுத்த முடியும். எனது அரசால் தொடங்கப் பட்ட தேர்தல் பத்திரம் திட்டம், கருப்புப் பணத்தை எதிர்த்துப் போராடியது. ஆனால் எதிர்க்கட்சிகள் பொய்யைப் பரப்புகிறார்கள்”** என்று 16.4.2024 அன்று தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் சொன்னவர் பிரதமர் மோடி அவர்கள்.

**‘தேர்தல் பத்திரங்களை ரத்து செய்ய வைத்தவர்கள் பின்னர் வருத்தப்படுவார்கள்’** என்று வருத்தப்பட்டுச் சொன்னதும் அவர் தான்.

**இப்போது நீதிமன்றத்தில் விளக்கம் அளிக்கும் நெருக்கடிக்கு பா.ஜ.க. தலைமை வந்துள்ளது. வாருங்கள், உங்கள் பதிலைச் சொல்லுங்கள் கேட்போம்!**





மதுரை விமான நிலையத்தில் கழக இளைஞரணி செயலாளர் – தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது. உடன் தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் மற்றும் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர், பொதுமக்கள் பங்கேற்றனர்.

### மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை விமான நிலையத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ. - மு.மணிமாறன் முன்னிலையில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு!

மதுரை, அக். 2 -

கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை விமான நிலையத்தில் மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் இரு வண்ணக் கொடி ஏந்தி எழுச்சிமிகு வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றார்கள்.

அதன் விபரம் வருமாறு:-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அயராது உழைப்பால் கழகப் பணியாற்றினார். அவர் வழியில் கழக இளைஞரணி செயலாளர், அமைச்சர், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 40க்கு 40 என நாடாளுமன்றத் தேர்தல் களத்தில் கழகத் தலைவருக்கு உறுதுணையாக அயராது தேர்தல் பணியாற்றி 40 தொகுதிகளிலும் அமோக வெற்றிக்கு பாடுபட்டவர் என்ற புகழ்பெற்றார்.

கழகப் பணி, தேர்தல் பணி, மக்கள் பணி என உழைப்பால் உயர்ந்த கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு துணை முதலமைச்சர் என்ற அங்கீகாரம் வழங்கினார். இதனை கழகத்தினரும், பொதுமக்களும், பெரும் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு முழுவதும் இனிப்புகள் வழங்கி பட்டாசுகள் வெடித்து கொண்டாடினார்கள்.

இந்நிலையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக துணை முதல்வர் ஆன பின்பு முதன் முதலாக நான் மாடக் கூடலாம் மதுரைக்கு சென்னையிலிருந்து விமானம் மூலம் விமான நிலையத்திற்கு வந்த கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மதுரை மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமையில் மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தெற்கு மாவட்டச் செயலாளர் மு.மணிமாறன் ஆகியோர் முன்னிலையில் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர், பொதுமக்கள் ஒன்று சேர்ந்து கையில் இரு வண்ண கொடியேந்தி, முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க, கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்க, தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வாழ்க என விண்ணை எட்டும் வகையில் கோஷமிட்டும், முரசு கொட்டு முழங்க, வண்ண மலர்கள் தூவி, வாண வேடிக்கையுடன் அன்போடு வரவேற்றார்கள்.

விமான நிலையத்திலிருந்து வழிநெடுகிலும் சாலையின் இரு புறங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு வந்து எழுச்சியுடன் வரவேற்றார்கள்.

இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன், மேயர் இந்திராணி பொன் வசந்த், மாவட்ட ஆட்சியர் சங்கீதா, முன்னாள் அமைச்சர் பொன் முத்துராமலிங்கம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை வடக்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சி செயலாளர்கள், நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழகத்தினர், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

### அண்ணாமலை பல்கலைக் கழகத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## அமைச்சர் க.பொன்முடி தலைமையில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் முன்னிலையில் நடைபெற்றது!

சிதம்பரம், அக். 2 -

கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் நேற்று முன்தினம் (30.09.2024) நடைபெற்றது.

தமிழ்நாடு அரசு முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் சார்பாகத் மாணவர்களுக்குகான பேச்சுப் போட்டியினை மாவட்டந்தோறும் கல்லூரி அளவில், பல்கலைக்கழக அளவில் மற்றும் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகிறது.

கடலூரில், அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் அனைத்திலும் முதற்கட்டமாகப் பேச்சுப்போட்டி நிகழ்த்தபெற்றது. இந்த நிகழ்ச்சியில் முதலாவதாக வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேச்சுப்போட்டி நடத்தபெற்றது.

அப்போட்டியில் தமிழ்நாடு அரசு சார்பாக முதலிடம் பெற்றவருக்கு ரூ.10,000 தொகையும், இரண்டாவதிடம் பெற்றவருக்கு ரூ.6,000 தொகையும், மூன்றாவதிடம் பெற்றவருக்கு ரூ.4,000/- பரிசுத் தொகையும் வழங்கப்பெற்றது.

தமிழ்நாடு அரசு முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவின் சார்பாக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ரூ.5,00,000/- மதிப்பீட்டில் மாணவர்களுக்காக முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ் மன்றம் அமைக்க பெற்றது.

இம்மன்றத்தின் சார்பாகப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மட்டும் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி நடத்தப்பெற்று, ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுத் தொகையும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெற்றது.

அமைச்சர் பெருமக்கள் தெரிவித்ததாவது:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, பல்வேறு சிறப்பு திட்டங்கள், நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருகிறது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சி காலத்தில் நிறைவேற்றிய சட்டங்களும், திட்டங்களும் அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் அமைந்துள்ளது. இந்தியாவில் உள்ள பல மாநிலங்களோடு ஒப்பிடுகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் கலைஞர் அவர்கள் நிறைவேற்றிய வளர்ச்சி திட்டங்களே ஆகும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எழுதிய பல புத்தகங்களை மேற்கோள் காட்டி அதனடிப்படையில் மாணவர்கள் திகழ வேண்டும் எனவும், மேலும் சான்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்ற வாக்கிற்கிணங்க கல்வி மட்டுமே தனிமனித வாழ்க்கையை மேம்படுத்தும். அதற்காக அரசு வழங்கும் சலுகைகளை பயன்படுத்தி மென்மேலும் உயர வேண்டுமென அமைச்சர் பெருமக்கள் அவர்கள் கூறினர்.

அவ்வகையில் பெரியார், அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் தற்போதைய முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின்; நலன் கருதி அவர்கள் வாழ்வில் முன்னேற்றமடையும் வகையில் பல்வேறு சீரிய திட்டங்களை அறிவித்து செம்மையாக செயல்படுத்தி வருகிறார்கள். பல்வேறு துறைகளின் மூலம் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு காணும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம், அரசு பள்ளியில் பயிலும் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கிடும் வகையில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம், மக்களை நாடி மக்கள் குறைகளை கேட்டு உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம், பேருந்துகளில் மகளிருக்கு இலவச பயணம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் மூலம் ஏழை எளிய மக்கள் பயனடைந்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி குடும்பத்திற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்திற்காக குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 உரிமைத் தொகையாக வழங்கிட முதலமைச்சர் அவர்களின் முன்னோடி திட்டமாக ‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்” செயல்படுத்தப் படுகிறது.

மேலும், அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்ற ஏழை எளிய மாணவிகளை சாதனையாளர்களாக உருவாக்கிடவும் அரசுப் பள்ளி மாணவிகள் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் ‘புதுமைப் பெண்’ திட்டம், மேலும், மாணவர்களின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடும் வகையில் ‘தமிழ்ப் புதல்வன்’ திட்டம், ‘கலைஞர் மகளிர் உரிமைத் தொகை’ திட்டத்தில் பயன்பெறும் மகளிர்கள் அத்தொகையை கூட்டுறவு வங்கியில் சிறப்பு தொடர் வைப்பு செய்யும் பட்சத்தில் அவர்களுக்கு 8 சதவிகித வட்டி வழங்கும் ‘தமிழ் மகள்’ திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள் என தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைச்செல்வன், அண்ணாமலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் முதுமுனைவர். இராம.கதிரேசன், அண்ணாமலைப் பல்கலைக் கழக பதிவாளர் (பொ.) இரா.சிங்காரவேல் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் நேற்று முன்தினம் (30.09.2024) நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சி.பி.ஆதித்யா செந்தில்குமார், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் தொல்.திருமாவளவன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிக்குமார், காட்டுமன்னார் கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைசெல்வன், அண்ணாமலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் முது முனைவர் இராம.கதிரேசன் ஆகியோர் உள்ளனர்.